# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 14.08.2023 ந் தேதி நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

**ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்**

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள KNMT கடை எண்.1,2,3,4 ஆகிய நான்கு கடைகளை திரு.N.அன்புசெல்வம் ராஜாகேட்டர்ஸ் என்பவர் 01.07.2023 முதல் குத்தகைக்கு எடுத்து நடத்திவருகிறார் குத்தகைதாரர் மேற்படி கடைகளின் மூன்று உட்புறசுவர்களை இடித்து ஒரே கடையாக நடத்திக்கொள்ள மனு அளித்துள்ளார் பொறியர் குறிப்பின் படி குத்தகைதாரரிடம் ரூ.1,50,000/– வைப்பு தொகை செலுத்திய பின்பும்,முத்திரைதாள் ஒப்பந்தம் பெற்றுகொண்டும் குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிந்தபின் கடையினை பழையபடியே ஒப்படைக்க உறுதிமொழி படிவம் பெற்றுக்கொண்டு உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந,க.எண்.1666/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் .

**அனுமதிக்கப்பட்டது. வருகை புரிந்த 26 நகர்மன்ற உறுப்பினர்களில் நகர்மன்றத் துணைத்தலைவர், வார்டு எண்.2,6,7,8,17,20,23 மற்றும் 26 ஆகிய வார்டு உறுப்பினர்கள் அனுமதி மறுக்கிறோம் என்றதால் மீதமுள்ள 17 நகர்மன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.578**

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சி நகர்மன்ற தலைவர், ஆணையாளர், பொறியாளர் அவர்களது ஈப்பு வாகனங்கள் மற்றும் குடிநீர் லாரி ஆகியவற்றின் வாகன பழுதுகள் சரிசெய்தல் காப்பீட்டு தொகை செலுத்துதல் மற்றும் வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய வரிகளை செலுத்த 2023–2024 ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந,க.எண்.1614/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு:**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகர்மன்ற தலைவர், ஆணையாளர், ஈப்பு வாகனம் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

3.பொறியாளர் ஈப்பு வாகனம் மற்றும் குடிநீர் லாரியின் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதி வழங்கியது**
**2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.579**

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான மொடச்சூர் வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் திருமதி.எம்.பார்வதி என்பவருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 234 நாள். 29.08.2022ன் படி, 01.09.2022 முதல் 31.08.2025 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. மேற்படி நபர் 06.07.2023ம் தேதிய விண்ணப்பத்தில் தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும், தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலும் தன்னால் வார சந்தையை தொடந்து நடத்த இயலவில்லை எனவும், எனவே 31.08.2023 ம் தேதியுடன் தனக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை ரத்து செய்யக்கோரியும், மேற்கொண்டு குத்தகை உரிமத்தை நீட்டிப்பு செய்ய வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் தனது 28.07.2023 ம் தேதிய குறிப்பில் திருமதி.எம்.பார்வதி என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 01.09.2023 முதல் ரத்து செய்து செய்யலாம் எனவும், மேற்படி வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் , மேலும் வாரசந்தை குத்தகை இனம் ஏலம் போகும் வரை துறை மூலம் வசூல் செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் 08.08.2023ம் தேதியிட்ட நகராட்சி பொறியாளர் அவர்கள் குறிப்பில் தற்போதுள்ள வாரசந்தை வளாகத்திலேயே புதியதாக 80 திறந்தவெளி கடைகள் கட்டப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 08.08.2023 ம் தேதிய குறிப்பில், வாரச்சந்தையில் புதியதாக கட்டப்பட்டு வரும் திறந்தவெளி கடைகள் மற்றும் கழிப்பிடம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஏற்கெனவே உள்ள வாரச்சந்தை குத்தகை இனத்துடன் சேர்த்து ஒரே ஆண்டு குத்தகை இனமாக ஏலம் விடலாம் எனவும், ஏல முன் வைப்புத் தொகை ரூ.3,00,000/– என உள்ளதை ரூ.6,00,000/– எனவும், சொத்து மதிப்பு சான்றின் மதிப்பு ரூ.5,00,000/– என உள்ளதை ரூ.10,00,000/– எனவும், சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.3,00,000/– என உள்ளதை ரு.5,00,000/– என உயர்வு செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார். வாரச்சந்தை குத்தகை இனத்திற்கு ஏற்கெனவே உள்ள பணியாளர் சம்பளத்தினை நீக்கம் செய்து விட்டு, குத்தகை தொகையுடன் பணியாளர் சம்பளத்தினையும் சேர்த்து பொது ஏலம் விடலாம் என வருவாய் ஆய்வர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் குறிப்பின்படி, தற்போதுள்ள வாரச்சந்தை குத்தகை இனத்துடன் வாரச்சந்தையில் புதியதாக கட்டப்பட்டு வரும் 80 திறந்தவெளி கடைகள் மற்றும் கழிப்பிடம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஒரே ஆண்டு குத்தகை இனமாக பொது ஏலம் விடவும், ஏல முன் வைப்புத் தொகை ரூ.3,00,000/–(மூன்று இலட்சம்) என உள்ளதை ரூ.6,00,000/– (ஆறு இலட்சம்) என உயர்வு செய்யவும், சொத்து மதிப்பு சான்றின் மதிப்பு ரூ.5,00,000/–(ஐந்து இலட்சம்) என உள்ளதை ரூ.10,00,000/–(பத்து இலட்சம்) என உயர்வு செய்யவும், சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.3,00,000/–(மூன்று இலட்சம்) என உள்ளதை ரு.5,00,000/–(ஐந்து இலட்சம்) என உயர்வு செய்யவும், வாரச்சந்தை குத்தகை இனத்திற்கு ஏற்கெனவே உள்ள பணியாளர் சம்பளத்தினை நீக்கம் செய்து விட்டு, குத்தகை தொகையுடன் பணியாளர் சம்பளத்தினையும் சேர்த்து பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் வாரச்சந்தை குத்தகை இனத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஏலம் போகும் வரை மொடச்சூர் வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் பணியினை துறை மூலம் வசூல் செய்யவும், அதற்கான கட்டண சீட்டுகள் அச்சடிக்கவும், துறை மூலமாக வசூல் செய்வதற்கு பணியாளர்களை நியமிக்கவும், கட்டண சீட்டுகள் அச்சடிக்க ஆகும் செலவினம் மற்றும் பொது ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினம் ஆகியவற்றை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1014/2021/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.580**

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி வணிக வளாகத்தில் ஏற்கெனவே இருந்து பழைய தினசரி சந்தை வணிக வளாகத்தினை இடித்து விட்டு, ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம் (IUDM) 2020–2021 ன் படி, 699,78 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தினசரி சந்தை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. புதிய தினசரி சந்தை வணிக வளாகத்தில் கீழ்த்தளத்தில் சுமார்

45 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், தரைத்தளத்தில் 102 கடைகள் மற்றும் 12 கழிப்பிடங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும், மேற்படி தினசரி அங்காடியினை ஏலம் கோர உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி பொறியாளர் அவர்கள் தனது 05.05.2023 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும் அரசு விலை விகிதத்தின்படி கடைகளுக்கு தனித்தனியாக மாதவாடகை நிர்ணயம் செய்து வழங்கியுள்ளார்.

வருவாய் ஆய்வர் தனது 05.06.2023 ம் தேதிய குறிப்பில், தினசரி வணிக வளாகத்தின் தரைக்கடைகளை தினசரி சந்தை ஆண்டுக்குத்தகை இனமாகவும், 26 வெளிப்புற கடைகளை தனித்தனி மாதவாடகை கடைகளாகவும், ஏலம் விடலாம் எனவும், மேற்படி குத்தகை இனங்களுக்கு நகராட்சி அலுவலர்களை கொண்ட குழு அமைத்து வைப்புத் தொகை மற்றும் சந்தை மதிப்பின் அடிப்படையில் கடைகளுக்கு மாத வாடகை நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

அதன்படி நகராட்சி அலுவலர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டது, மேற்படி குழு தினசரி ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் வெளிப்புற கடைகள் ஆகிய குத்தகை இனங்களுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில், பின்வரும் விபரப்படி வைப்புத் தொகை மற்றும் மாதவாடகை நிர்ணயம் செய்யலாம் என தனது 07.08.2023 ம் தேதிய அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

குழுவின் அறிக்கை பின்வருமாறு :

1) மாத வாடகை கடைகளுக்கு வசூல் செய்யப்பட வேண்டிய வைப்புத் தொகை மற்றும் மாத வாடகை விபரம் :

| வ.எண். | கடையின் விபரம் | செலுத்த வேண்டிய பொறுப்பு தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | கடை எண். A1 முதல் A26 வரையிலான 97 சதுரடி அளவுள்ள வெளிப்புற கடைகள் – 26 | **ரூ.2,50,000/-** | **ரூ.15,000/-** |
| 2 | கடை எண். G1 முதல் G2 வரையிலான 78 சதுரடி அளவுள்ள உள் புற கடைகள் – 2 | **ரூ.2,00,000/-** | **ரூ.10,000/-** |

2) புதிய தினசரி வணிக வளாகத்தின் கீழ்த்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடம், தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள தினசரி சந்தை திறந்தவெளி கடைகள் மற்றும் கழிப்பிடம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஒரே ஆண்டு குத்தகை இனமாக பொது ஏலம் விடலாம்

மேற்படி ஆண்டு குத்தகை இனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை விபரம் பின்வருமாறு :

| வ.எண் | செலுத்த வேண்டிய பொறுப்பு தொகை | சொத்து மதிப்பு சான்று / வங்கி உத்தரவாத சான்று கொடுக்க வேண்டிய தொகை | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | **ரூ.15,00,000/-<br>(ரூ.பதினைந்து லட்சம்)** | **ரூ.15,00,000/-<br>(ரூ.பதினைந்து லட்சம்)** | **ரூ.10,00,000/-<br>(ரூ.பத்து லட்சம்)** |

தினசரி சந்தை குத்தகை இனத்திற்கு ஏற்கெனவே உள்ள பணியாளர் சம்பளத்தினை நீக்கம் செய்து விட்டு, குத்தகை தொகையுடன் பணியாளர் சம்பளத்தினையும் சேர்த்து பொது ஏலம் விடலாம்.

3) அங்காடிகள் அதாவது சுற்றுச் சுவருக்குள் உள்ள கடைகள், காலியிடங்கள், விற்பனைக்காக சாமான்கள், பண்டங்கள் ஏற்றிக்கொண்டு வரும் வண்டிகள், லாரிகள், தலைச்சுமை இனங்கள் ஆகியவற்றிற்கு வசூல் செய்யப்படவேண்டிய கட்டண விகிதங்கள் :

| வ.எண் | விபரம் | கட்டண விகிதம் நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1 | பாரமேற்றிய கனரக மோட்டார் வாகனம் (நான்கு சக்கரம், ஆறு சக்கரம் மற்றும் டிரையிலர் வாகனம்) ஒன்றுக்கு ஒவ்வொரு முறையும். | ரூ.200/– |
| 2 | பாரமேற்றிய இலகு ரக மோட்டார் வாகனம் ஒன்றுக்கு ஒவ்வொரு முறையும் | ரூ.150/– |
| 2 | இரட்டை மாட்டு பார வண்டி அல்லது மூன்று சக்கர மோட்டார் வாகனம் ஒன்றுக்கு ஒவ்வொரு முறையும். | ரூ.100/– |
| 3 | இரண்டு சக்கர வாகனத்தில் கொண்டு வரும் துண்டு ஒன்றுக்கு | ரூ.15/ |
| 4 | தலைச்சுமை துண்டு ஒன்றுக்கு | ரூ.10/ |
| 5 | விற்பனைக்கு கொண்டு வரும் நெய் ஒவ்வொரு லிட்டருக்கும் (அ) அதன் பாகத்திற்கும் | ரூ.20/– |
| 6 | சைக்கிளில் கொண்டு வரும் துண்டு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | ரூ.15/ |
| 7 | 78 **சதுரடி** அளவுள்ள கடைஎண். B–1 முதல் B–22 வரையிலான கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு | ரூ.100/– |
| 8 | 62 **சதுரடி** அளவுள்ள கடைஎண். C–1 முதல் C–42 வரையிலான கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு | ரூ.100/– |
| 9 | 80 **சதுரடி** அளவுள்ள கடைஎண். D–1 முதல் D–2 வரையிலான கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு | ரூ.100/– |
| 10 | 47 **சதுரடி** அளவுள்ள கடைஎண். E–1 முதல் E–6 வரையிலான கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு | ரூ.75/– |
| 11 | 97 **சதுரடி** அளவுள்ள கடைஎண். F–1 முதல் F–2 வரையிலான கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு | ரூ.100/– |
| 12 | மார்கட் விஸ்தரிப்பு கட்டிடத்தில் 8 x 8 அளவுள்ள ACC சீட் கொண்ட கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | ரூ.50/– |

மேற்கண்ட விபரங்களின் படி வைப்புத் தொகை மற்றும் கட்டண விகிதங்கள் ஆகியவற்றை நிர்ணயம் செய்து குழு பரிந்துரை செய்துள்ளது.

வருவாய் ஆய்வர் தனது 07.08.2023 ம் தேதிய குறிப்பில், தினசரி சந்தைக்கான வாடகை மற்றும் வைப்புத் தொகை நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்ட குழுவானது சந்தை மதிப்பின் அடிப்படையில் பரிந்துரை செய்துள்ள கடைகளுக்கான மாதவாடகை, வைப்புத் தொகை(பொறுப்புத் தொகை), சொத்து மதிப்பு சான்றின் மதிப்பு, சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை மற்றும் கட்டண விகிதங்கள் ஆகியவற்றை மன்றத்தின் அனுமதி பெற்று நிர்ணயம் செய்யலாம் எனவும்,

தினசரி சந்தை வணிக வளாகத்தின் கீழ்த்தளத்தில் அமைக்கப்படவுள்ள வாகன நிறுத்துமிடம், தரைத்தளத்தில் அமைக்கப்படவுள்ள 74 திறந்த வெளிக்கடைகள், மார்கட் விஸ்தரிப்பு கட்டிடத்தில் அமைந்துள்ள திறந்தவெளிக்கடைகள் மற்றும் கழிப்பிடங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஒரே ஆண்டு குத்தகை இனமாக ஏலம் விடலாம் எனவும், மேலும் தினசரி ஆண்டு குத்தகை இனத்திற்கு ஏற்கெனவே உள்ள பணியாளர் சம்பளத்தினை நீக்கம் செய்து விட்டு, குத்தகை தொகையுடன் பணியாளர் சம்பளத்தினையும் சேர்த்து பொது ஏலம் விடலாம் எனவும்,

மாற்றுத்திறனாளிகளுக்கு தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கடை எண். A1 கொண்ட கடையினை மன்றத்தின் அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்யலாம் எனவும்,

பழைய தினசரி சந்தை வணிக வளாக இடிப்பது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த கடை குத்தகைதாரர்ளுக்கு, வழக்கின் தீர்ப்பின் அடிப்படையின் நிலுவையின்றி வாடகை செலுத்தியுள்ள முன்னாள் கடை குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கலாம் எனவும், மேற்படி கட்டண விகிதங்கள், வைப்புத் தொகை மற்றும் மாதவாடகை அடிப்படையில் தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனம் மற்றும் மாதவாடகை கடைகளுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் குறிப்பின்படி,

1) தினசரி சந்தை வணிக வளாகத்தின் வெளிப்புறத்தில் அமைக்கப்படவுள்ள A1 முதல் A26 வரையிலான வெளிப்புற தனித்தனி கடைகளுக்கு ஏல முன்வைப்புத்தொகை ரூ.2,50,000/– மாதவாடகை ரூ.15,000/– என நிர்ணயம் செய்யவும், உட்புறத்தில் அமைக்கப்படவுள்ள G1, G2 ஆகிய இரண்டு கடைகளுக்கு ஏல முன்வைப்புத்தொகை ரூ.2,00,000/– மாதவாடகை ரூ.10,000/– என நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2) தினசரி சந்தை வணிக வளாகத்தின் கீழ்த்தளத்தில் அமைக்கப்படவுள்ள வாகன நிறுத்துமிடம், தரைத்தளத்தில் அமைக்கப்படவுள்ள 76 தரைக்கடைகள், கழிப்பிடங்கள் மற்றும் மார்கட் விஸ்தரிப்பு கட்டிடத்தில் உள்ள ACC சீட் தரைக்கடைகள் ஆகியவற்றினை ஒருங்கினைத்து ஒரே ஆண்டு குத்தகை இனமாகவும், மேற்படி ஆண்டு குத்தகை இனத்திற்கு ஏல முன்வைப்புத் தொகை ரூ.15,00,000/–(பதினைந்து லட்சம்) , சொத்து மதிப்பு சான்றின் மதிப்பு ரூ,15,00,000/–(பதினைந்து லட்சம்) சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.10,00,000/–(பத்து லட்சம்) என நிர்ணயம் செய்யவும், மேலும் தினசரி சந்தை குத்தகை இனத்திற்கு ஏற்கெனவே உள்ள பணியாளர் சம்பளத்தினை நீக்கம் செய்து விட்டு, குத்தகை தொகையுடன் பணியாளர் சம்பளத்தினையும் சேர்த்து பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

3) அரசாணை (நிலை) எண். 82 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(ப.ரா.2)துறை நாள்.13.06.2023 ன் படி, மொத்தம் உள்ள 26 கடைகளில் 5 சதவீதம் என்ற அடிப்படையில் கடை எண். A1 கொண்ட ஒரு கடையினை மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்பபடுகிறது.

4) மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் மாத வாடகை கடைகள் ஆகியவற்றிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகை, மாதவாடகை மற்றும் கட்டண விகிதங்களின் அடிப்படையில், ஆண்டு குத்தகை இனங்களுக்கு அரசாணை (நிலை) எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள். 19.09.2008 ன் படியும், மாதவாடகை கடைகளுக்கு அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) நாள். 30.07.2007 ன் படியும் மற்றும் 2021–2022 ம் ஆண்டிற்கான கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஏல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று

ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க, முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

5) ஏற்கெனவே இருந்த பழைய தினசரி சந்தை வணிக வளாகத்தினை இடித்துவிட்டு புதிய தினசரி வணிக வளாகம் கட்டுவதினை எதிர்த்து முன்னால் கடை குத்தகைதாரர்களால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P No. 4534 of 2021 ன் தீர்ப்பின்படி, வழக்கில் கலந்து கொண்ட 15 நபர்களில் நிலுவையின்றி வாடகை செலுத்தியுள்ள முன்னால் கடைகுத்தகைதாரகள் ஒருவருக்கு ஒரு கடை என்ற அடிப்படையில் முன்னுரிமை வழங்கலாம் என்பதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு :**

1) 26 வெளிப்புற மற்றும் 2 உட்புற தனித்தனி கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட வைப்புத் தொகை மற்றும் மாதவாடகை ஆகியவற்றை மன்றம் அனுமதிக்கலாம்.

2) தினசரி சந்தை வணிக வளாகத்தில் கீழ்த்தளத்தில் அமைக்கப்படவுள்ள வாகன நிறுத்துமிடம், தரைத்தளத்தில் அமைக்கப்படவுள்ள திறந்தவெளிக்கடைகள், கழிப்பிடங்கள் மற்றும் மார்கட் விஸ்தரிப்பு கட்டிடத்தில் உள்ள ACC சீட் தரைக்கடைகள் ஆகியவற்றினை ஒருங்கிணைத்து ஒரே ஆண்டு குத்தகை இனமாக ஏலம் விடவும், தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனத்திற்கு ஏற்கெனவே உள்ள பணியாளர் சம்பளத்தினை நீக்கம் செய்து விட்டு குத்தகை தொகையுடன் சேர்த்து பணியாளர் சம்பளத்தினையும் சேர்த்து பொது ஏலம் விடவும், மேற்படி ஆண்டுக்குத்தகை இனத்திற்கு நிர்ணயம் செய்துள்ள வைப்புத் தொகை, சொத்துமதிப்பு சான்றின் மதிப்பு, சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை மற்றும் கட்டண விகிதங்கள் ஆகியவற்றை மன்றம் அனுமதிக்கலாம்.

3) மாற்றுத்திறனாளிகளுக்கு கடை எண். A1 கொண்ட கடையினை ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

4) மேற்படி தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனம் மற்றும் மாதவாடகை கடைகளுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

5) வழக்கில் கலந்து கொண்ட 15 முன்னால் குத்தகைதாரர்களுக்கு ஒருவருக்கு ஒரு கடை என்ற அடிப்படையில் முன்னுரிமை வழங்கலாம் என்பதை மன்றம் பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு 1,2,3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது**
**5 பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.581**

5. நகராட்சிக்கு சொந்தமான IUDP மோர் மார்கட் கடை எண். 01 ( வரி விதிப்பு எண். 057/509) திரு.ஜி.வி.மாரிசுவாமி த/பெ. வாரணவாசி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடையின் குத்தகை உரிமகாலம் 31.03.2016 ம் தேதியுடன் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்ததால், மேற்படி கடைக்கு ஏற்கெனவே இருந்த பழைய வாடகை ரூ.1525/– ஐ, அரசாணை(நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள். 03.07.2007 ன் படி, அப்போதைய அங்காடி மதிப்பின்படி வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டு, ரூ.6,400/– என நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி நபர் மறுமதிப்பீடு செய்யப்பட்ட வாடகையினை எதிர்த்து கோபிசெட்டிபாளையம் உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு எண். OS No.313/2018 ன் படி வழக்கு தொடர்ந்திருந்தார்.

மேற்படி வழக்கு 25.08.2022 ம் தேதிய தீர்ப்பின்படி (தீர்ப்பாணை பெறப்பட்ட நாள். 31.07.2023), மனுதாரர் வழக்கில் ஆஜராகாத காரணத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடைக்கு தற்போதைய மாத வாடகை ரூ.8,464/– ஆக உள்ளது. கடை குத்தகை உரிமதாரருக்கு 2018–2019 செப்டம்பர் மாதம் முதல் 2023–2024 ஆகஸ்ட் மாதம் முடிய வாடகை நிலுவை தொகை ரூ.5,34,869/– மற்றும் ஒரு வருட வாடகை வைப்பு தொகை ரூ.1,16,256/– ஆக மொத்தம் ரூ.6,51,125/– செலுத்தக்கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.4,000/– வழங்கக்கோரி, நகர்மன்ற வழக்கறிஞர் திரு.யு.கே.காணிவேலுச்சாமி அவர்கள் தனது 31.07.2023 ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். எனவே நகர்மன்ற வழக்கறிஞர் திரு.யு.கே.காணிவேலுச்சாமி அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.4,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0097/2019/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். .
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.582**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி அங்காடி பகுதியில் இயங்கி வரும் பழையாஸ்பத்திரி வீதி கடை எண். 22 ( வரி விதிப்பு எண். 057/79) திரு.ஆர்.ஜி.அருண்ஆதித்யா என்பவருக்கு 01.04.2023 முதல் 31.03.2026 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி கடை மிகவும் பழுதடைந்து நிலையில் உள்ளதால், அக்கடையினை இடித்து அப்புறத்தப்பட வேண்டியுள்ளதால், கடையினை காலி செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள, பொறியாளர் பிரிவு குறிப்பு ந.க.எண். 1687/2022/இ1 நாள். 05.05.2023 ன் படி தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி கடை குத்தகை உரிமதாரருக்கு கடையினை காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கடை குத்தகை உரிமதாரர் மேற்படி கடையினை 14.07.2023 முதல் காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டதாக தனது 19.07.2023ம் தேதிய மனுவில் தெரிவித்துள்ளார். வருவாய் ஆய்வர் தனது 28.07.2023 ம் தேதிய குறிப்பில், மேற்படி பழையாஸ்பத்திரி வீதி கடை 22 ஐ, மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ளவாறு கடையினை காலி செய்து விட்டார் எனவும், தற்போது மேற்படி கடை நகராட்சியால் இடிக்கப்பட்டுவிட்டது எனவும், மேற்படி கடைக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 15.07.2023 முதல் மன்றத்தின் அனுமதி பெற்று ரத்து செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் குறிப்பின் படி, பழையாஸ்பத்திரி வீதி கடை எண். 22 (வரி விதிப்பு எண். 057/79) கடையின் குத்தகை உரிமத்தை 15.07.2023 முதல் ரத்து செய்யவும், மேற்படி கடைக்கான கேட்பினை 15.07.2023 ந் தேதி முதல் நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2190/2020/அ3)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.583**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி